## நாகப்பட்டினம் நகராட்சி

2025– ம் ஆண்டு ஜீலை மாதம் 03 ஆம் நாள் வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கை

தீர்மான நகல்

| கூட்ட நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள்களின் விபரம் | தீர்மான எண் |
|---|---|---|
| 03.07.2025 | **பொருள் எண்.** 1<br>நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர் அவர்களின் ஜுன் 2025 ஆம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் | தீர்மானம் எண். 76<br>பதிவு செய்யப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.** 2 ள<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 7ல் வண்ணாங்குளம் பகுதியில் பாதாள சாக்கடை Pumping station அருகாமையில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து பொதுமக்களுக்கு இடையூராக உள்ளதால் புதிய சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க..எண்:– 147/2025/இ1 | தீர்மானம் எண். 77<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.** 3<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் 7ல் உள்ள கீழ்கண்ட சாலைகள் பழுதடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் காரியாங்குடி நாயக்கன் தெரு, பெருமாள் கீழ வீதி, வண்ணார தெரு மற்றும் வண்ணான் குளம் வடகரை ஆகிய பகுதிகளில் தார் பேட்ச் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:– 147/2025/இ1 | தீர்மானம் எண்.78<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.** 4<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்கு நாகப்பட்டினம் வட்டார போக்குவரத்து அலுவலரின் உரிமம் புதுப்பிப்பதற்காக பேருந்து நிலைய வளாகத்தில் மாற்று திறனாளிகள் செல்வதற்கு வசதியாக சாய்வுதளம் (Ramp) மற்றும் கைப்பிடிகம்பி (Handrails) அமைத்திட கோரப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.0.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது | தீர்மானம் எண்.79<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | அலுவலககுறிப்பு<br>1. மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க. எண். 147 /2025/இ1 | |
| 03.07.2025 | **பொருள் எண். 5**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் அமிர்தா நகர் பகுதியில் செயல்பட்டு வந்த பாதாள சாக்கடை கழிவுநீர் சேகரமாகும் மூன்று எண்ணிக்கையிலான கிணறுகள் திறந்தவெளியில் உள்ளதால் பொதுமக்களின் நலன் கருதி கிணறுகளில் மேல் புறத்தில் Grill Gate கொண்டு மூடி அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.80<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண். 6**<br>நாகப்பட்டினம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பொறியியல் பிரிவில் பொருட்கள் பாதுகாப்பு அறை தடுப்பு பணி, நகரமைப்பு பிரிவின் கணினி அறை பராமரிப்பு பணி மற்றும் இதர பணிகள் மேம்பாடு செய்யும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 147/2025/இ1 | தீர்மானம் எண்.81<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.7**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் வார்டு எண் 2ல் உள்ள மகதும்சா மாலுமியார் தெரு மற்றும் தர்கா குளம் கீழ்கரை பகுதியில் உள்ள இரண்டு எண்ணிக்கையிலான சிறுபாலங்கள் பழுதடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் புதியதாக இரண்டு சிறுபாலங்கள் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..<br>அலுவலககுறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. மேற்காணும் பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க. எண். 147 /2025/இ1 | தீர்மானம் எண்.82<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.8**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான வெளிப்பாளையம் குடிநீர் நீர் தேக்க தொட்டியில் உள்ள மோட்டார் பழுதடைந்து உள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிய மின்மோட்டார் பொருத்தி மின் இணைப்புகளை சீரமைக்கும் பணி மற்றும் கல்லுக்குடி பகுதியில் உள்ள போர்வெல் பழுதடைந்து குடிநீர் வராத காரணத்தினால் மேற்படி Borewell ஐ Flushing | தீர்மானம் எண்.83<br>அ.கு<br>அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | செய்தும், மின் இணைப்புகளை சீரமைக்கவும் தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க. எண். 147 /2025/இ1 | |
| 03.07.2025 | **பொருள் எண்.9**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான பட்டமங்கலம் நீரேற்று உந்து நிலையத்தில் உள்ள ஆழ்துளை கிணற்றில் பயன்படுத்தப்பட்ட மின்மோட்டார் பழுதடைந்து குடிநீர் வராத காரணத்தினால் புதியதாக ஆழ்துளை மின்மோட்டார் விநியோகம் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.15 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்:– 147/2025/இ1 | தீர்மானம் எண்.84<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.10**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான நாகப்பட்டினம் தாமரைகுளத்தில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலா மேம்பாட்டு குழு இணைந்து பெடல் போட் (படகு) மற்றும் வாட்டர் சைக்கிள் இயக்குவதற்கு அனுமதி கோரியுள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் நாகப்பட்டினம் அவர்களின் நேர்முக கடிதம் எண்.05/c.o/2025 நாள்.30.05.2025 மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலககுறிப்பு**<br>1 மன்றம் பரிசீலனை செய்து முடிவு செய்யலாம்<br>ந.க. எண். 1780/2025/அ1 | தீர்மானம் எண்.85<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.<br>.<br>. |
| 03.07.2025 | **பொருள் எண்.11**<br>நாகப்பட்டினம் நகராட்சி 1 முதல் 36 வார்டு பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் ஒப்பந்த தனியார் நிறுவன தூய்மைப் பணியாளர்கள் மூலம் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மக்கள் அதிக அளவில் கூடும் பேருந்து நிலையம் , கடைத்தெரு பகுதிகள், நாகூர் தர்கா சுற்றியுள்ள பகுதிகளில் குப்பைகள் பொதுவெளியில் அதிக அளவில் காணப்படுவதால் பொது சுகாதார கேடு ஏற்படுகிறது. இதனை தடுக்கும் பொருட்டு திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி ஸ்டான்ட் மற்றும் மூடியுடன் கூடிய இரட்டை குப்பைத்தொட்டி (Twin Bin with lid and Stand) வணிக பயன்பாடு பகுதிகள் மற்றும் பயணிகள் அதிகம் கூடும் முக்கிய பகுதிகளில் வைப்பதற்கு 50 எண்ணிக்கையிலான குப்பைத்தொட்டி (Twin Bin with lid and Stand) தேவைப்படுகிறது. எனவே உத்தேச செலவினம் ரூ.5,00,000/. க்கு (ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>2 இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் | தீர்மானம் எண்.86<br>அ.கு.<br>அனுமதிக்கப்பட்டது.<br>. |

| | | |
|---|---|---|
| | மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.2395/2015/எச்1 | |
| 03.07.2025 | **பொருள் எண்.12**<br>**கசடுகழிவு மேலாண்மை உபவிதிகள்** 2024 (**திருத்தப்பட்டது**) (The Septage Management Bye Laws (Amendment) 2024–ஐ பொதுமக்களின் பார்வைக்கும் ஆட்சேபனையிருப்பின் 15 தினங்களுக்குள் நகராட்சி ஆணையர் அவர்களிடம் எழுத்து வாயிலாக அறிவித்திடகோரும் அறிவிப்பு தினகரன் தினசரி நாளிதழில் 18.06.2025 அன்று மிக சிறிய அளவில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பர கட்டணமாக ரூ.6720–ஐ வழங்கிடக்கோரி Kal Publications (p) Ltd நிறுவனத்திடமிருந்து பில் பட்டியல் (Invoice No.3300557227/18.06.2025) வரப்பெற்றுள்ளது. அதன்படி தொகை ரூ.6720/–ஐ நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1763/2025/H1 | தீர்மானம் எண்.87<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| 03.07.2025 | **பொருள் எண்.13**<br>நாகப்பட்டினம் நகராட்சி கோட்டைவாசல் MCC–;ல் வைக்கப்பட்டு இருக்கும் Bailing Machine பழுதடைந்து செயல்படாமல் உள்ளது. இதனால் தூய்மைப்பணியாளர்கள் மூலம் தரம் பிரித்து வாங்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் Bailing செய்து சிமெண்ட்ஆலைக்கு அனுப்ப முடியாத நிலை உள்ளது. எனவே பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி மேற்கண்ட Bailing Machine பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு உத்தேச செலவினம் ரூ.175000/–(ஒரு இலட்சத்து எழுபத்தைந்தாயிரம் மட்டும்) நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். /2025/H1 | தீர்மானம் எண்.88<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.14**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.15 நெய்தல் நகர் பாபா கோவில் செல்லும் சாலையில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே மேற்படி சிறுபாலத்தினை புதியதாக அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.30 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் அனுமதிக்கலாம்<br>2 \| மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.147/2025/இ1 | தீர்மானம் எண்.89<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 03.07.2025 | **பொருள் எண்.15**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.3 தெருப்பள்ளி தெருவில் சிறுபாலங்கள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே மேற்படி 2 எண்ணிக்கையில் புதியதாக சிறுபாலங்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>2 மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.147/2025/இ1 | தீர்மானம் எண்.90<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.16**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குப்பட்ட வார்டு எண்.1 சிவன் மேலமட விளாகத்தில் உள்ள சிறுபாலங்கள் மிகவும் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக உள்ளது. எனவே மேற்படி 2 எண்ணிக்கையில் புதியதாக சிறுபாலங்கள் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>2 மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.147/2025/இ1 | தீர்மானம் எண்.91<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது |
| 03.07.2025 | **பொருள் எண்.17**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட குமரன் கோவில் நான்குகால் மண்டபம் அருகில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து வழங்ககோரி தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தஞ்சாவூர் –6 அவர்களின் கடிதம் ந.க.எண்.1941/வி/பாலகம் /2023, நாள்.24.05.2025 அன்று கோரியுள்ளார். எனவே நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைத்துககொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 1600 /2025/அ1 | தீர்மானம் எண்.92<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது. |
| 03.07.2025 | **பொருள் எண்.18**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் அரசு மருத்துவமனை அருகில் ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்து வழங்ககோரி தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் தஞ்சாவூர் –6 அவர்களின் கடிதம் ந.க.எண்.1941/வி/பாலகம் /2023, நாள்.24.05.2025 அன்று கோரியுள்ளார். எனவே நகராட்சி வருவாயினை கருத்தில் கொண்டு மேற்படி இடத்தில் ஆவின் பாலகம் அமைத்துககொள்ள அனுமதி வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1 மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண். 2038 /2025/அ1 | தீர்மானம் எண். 93<br>அ.கு,<br>அனுமதிக்கப்பட்டது<br>. |

03.07.2025

## பொருள் எண்.19

நாகப்பட்டினம் நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN-51-AP -9160 மினி ஜெட்ராடிங் வாகனத்திற்கு ஆண்டு தகுதிச்சான்று பெறுவதற்கு உரிய பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவேண்டியுள்ளதால் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் அனுமதிக்கலாம் |
| | 2 | மேற்படி பணிக்கு உண்டான செலவினத்தை நகராட்சியின் பாதாள சாக்கடை sநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம். |

ந.க.எண்.1783 /2025/இ2

தீர்மானம் எண். 94
அ.கு,
அனுமதிக்கப்பட்டது

03.07.2025

## பொருள் எண்.20

நாகப்பட்டினம் நகராட்சியின் 15வது மத்திய நிதிக்குழு மானியம் (Untied Grant) 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண் 11919/2022/இஏ2 நாள் 13.05.2025ல் பணியினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 150/2025/இ2-5 நாள் 15.05.2025ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், தஞ்சாவூர் அவர்களால் 19.05.2025ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 11.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | **சிப்பம்-1** நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட புதுத்தெரு, நெல்லுக்கடை மாரியம்மன் வடக்கு ரோடு, திருமேனி செட்டி தெரு மற்றும் அக்கரைக்குளம் வடக்கு தெருவில் தார் சாலைகள் மேம்பாடு செய்யும் பணி | 44.00 | திரு. பி.ரகுநாதன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம் | 0.03 | -- |
| | | | திரு.கே, கோபாலகிருஷ்ணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம். | -- | 1.66 |
| 2 | **சிப்பம்-2** நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட மேலக்கோட்டை வாசல் தெரு, | 61.00 | மெசர்ஸ். திருமலையான் கன்ஸ்ட்ரக்ஷன், பிரைவேட் லிமிடெட், நாகப்பட்டினம். | 0.04 | -- |

தீர்மானம் எண். 95
அ.கு,
அனுமதிக்கப்பட்டது
.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அக்கரைக்குளம் தென்கரை, சட்டையப்பர் வடக்கு வீதி, மருந்துகொத்தளம் காளியம்மன் சன்னதி மற்றும் பெருமாள் தெற்கு வீதியில் தார் சாலைகள் மேம்பாடு செய்யும் பணி | | மெசர்ஸ். ஸ்ரீ பாலாஜி பில்டர்ஸ், நாகப்பட்டினம். | -- | 1.36 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| அலுவலக குறிப்பு | 1 | மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம் |

ந.க. எண். 1442/2025/இ1

03.07.2025

## பொருள் எண்.21

நாகப்பட்டினம் நகராட்சியின் மூலதன மான்ய நிதி மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பற்றாக்குறை மானிய நிதி 2025-26ன் கீழ் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை செயல்முறை ஆணை ந.க.எண் 9999/2025/எஸ்எஸ்2 நாள் 30.05.2025 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதனைத் தொடர்ந்து மண்டல செயற்பொறியாளர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், தஞ்சாவூர் அவர்களால் 02.06.2025ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 27.06.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு.

| வ, எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர்களின் விபரம் | மதிப்பீட்டு விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | குறைவு | அதிகம் |
| 1. | நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் வார்டு எண் 03, யூசுப் நைனார் தெருவில் சமுதாயக்கூடம் கட்டும் பணி | 49.50 | திரு. பி.சிவசக்தி, ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம். | 0.03 | -- |
| | | | திரு.எஸ். சத்யநாராயணன், ஒப்பந்ததாரர் நாகப்பட்டினம். | -- | 0.26 |

மேற்கண்ட திட்டப்பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டைவிட 0.03 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. பி.சிவசக்தி என்பவரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று உடன் பணி உத்தரவு வழங்கப்பட்டதனை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மானம் எண்.96
அ.கு, அனுமதிக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக குறிப்பு \| 1 \| மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br>ந.க. எண். 147/2025/இ1 | | |
| 03.07.2025 | **பொருள் எண்.22**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி. G.திவ்யா அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 1–வது வார்டுக்குட்பட்ட ஜல் ஜீவன் திட்டத்தின் மூலம் புதிய குடிநீர் இணைப்பு வேலையால் எனது வார்டில் அமைந்துள்ள சிவன் தெற்கு வீதி, சிவன் தெற்கு மட விளாகம், ஒத்தகம்மாளத் தெரு, ரெட்டகம்மாளத் தெரு, தோணித்துறை ரோடு, கோசாகுளம் தெரு ரோடு, ஆகிய தெருக்களில் உள்ள சாலைகள் மிகவும் குண்டும் குழியுமாக உள்ளது. வருங்காலம் மழைக்காலம் என்பதனால் உடனடியாக புதிய சாலை அமைத்து தருமாறு இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 97<br>தீர்மாணிக்கப்பட்டது | |
| 03.07.2025 | **பொருள் எண்.23**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி. S.பதுருநிஷா அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>2–வார்டுக்குட்பட்ட ரேசன் கடை அம்பேத்கார் நகர், வடக்கில் இயங்கிவருகிறது. இதனால் ஏழை எளிய மக்கள் மற்றும் முதியவர்கள் வாங்க ஆட்டோ வில் சென்று ரேசன் பொருள்கள் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே அம்பேத்கார் நகரில் உள்ள ரேசன் கடையை இரண்டு கடைகளாக பிரித்து நெல்லுக்கடைத்தெருவில் நகராட்சி சொந்தமான இடத்தில் புதிய கடை ஒன்று கட்டித்தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண். 98<br>தீர்மாணிக்கப்பட்டது | |
| 03.07.2025 | **பொருள் எண்.24**<br>**24. நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.தியாகராஜன் அவர்களால் கொண்டுவரப்படும்**<br>**கோரிக்கை மனு –**<br>➢ 8–வது வார்டுக்குட்பட்ட நாணயக்காரத் தெரு மற்றும் சில பகுதிகளில் தெரு விளக்குகள் மங்கலாகவும், சில இடங்களில் பழுதாகியும் உள்ளது அதனை சீர் செய்து தருமாறும்.<br>➢ 8–வது வார்டு குயவர் மேட்டுத் தெருவில் திரௌபதியம்மன் கோவில் உள்ளது. குயவர் தெரு முன்பகுதியில் நுழைவு வாயில் அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 99<br>தீர்மாணிக்கப்பட்டது | |

| | | |
|---|---|---|
| 03.07.2025 | **பொருள் எண்.25**<br>**நகர்மன்ற உறுப்பினர் திருமதி. வீ.ரேவதி அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ எனது 10–வார்டுக்குட்பட்ட அம்பேத்கார் நகர் வடக்கு பகுதியில் சுமார் 300 சுனாமி குடியிருப்பு உள்ளது. பாதாள சாக்கடை மேன்ஹோல் அனைத்தும் மண் அடைப்பு ஏறப்பட்டுள்ளது. வீடுகளில் உள்ள கழிவுநீர் வெளியே போக முடியாத நிலையில் உள்ளது. எனவே அனைத்து மேன்ஹோல் மற்றும் பாதாள சாக்கடைகளை தூர்வாரி தருமாறும்.<br>பீரோடும் பூந்தோட்டம் பகுதியில் விட்டுப்போன பாதாள சாக்கடைஇணைப்பு அமைத்து தருமாறும் இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன் | தீர்மானம் எண். 100 தீர்மாணிக்கப்பட்டது |
| 03.07.2025 | **பொருள் எண்.26**<br>**26. நகர்மன்ற உறுப்பினர் திரு. D. மணிகண்டன் அவர்களால் கொண்டுவரப்படும் கோரிக்கை மனு –**<br>➢ 22–வது வார்டுக்குட்பட்ட பெட்ரோல் பங்கு பின்புறம் மற்றும் பாரதி மார்க்கெட்டை சுற்றியுள்ள சாலைகள் மிகவும் மோசமான நிலை உள்ளதால் மக்கள் போக்குவரத்து மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே புதிய தார்சாலைகள் அமைத்து தரவும்,<br>➢ அண்ணா படிப்பகம் 2– சந்து, 3வது சந்து பாதாளசாக்கடை இல்லாமல் மக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றன, எனவே மேற்படி சந்திகளில் பாதாளசாக்கடை அமைத்து தர இத்தீர்மானம் மூலம் கேட்டுக்கொள்கிறேன். | தீர்மானம் எண். 101 தீர்மாணிக்கப்பட்டது |
| 03.07.2025 | **பொருள் எண்.27**<br>நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் தெத்தி புதுரோட்டில் பழுதடைந்த நிலையில் அமைந்துள்ள தகனமேடையினை அப்புறப்படுத்தி விட்டு அவ்விடத்தில் புதியதாக தகனமேடை அமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு: 1 மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2 மேற்காணும் பணிக்குண்டான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்:147/2025/இ1 | தீர்மானம் எண். 102 தீர்மாணிக்கப்பட்டது |

// உண்மை நகல் //

(ஒம்) இரா,மாரிமுத்து
நகர்மன்ற தலைவர்